# R 5922 (page207)

## சுவாரசியமான கடிதங்கள்

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - இக்கடிதத்தோடுகூட நான் நான்கு கேள்விகளையும் இணைத்துள்ளேன்; அவைக் குறித்துப் பனாமாவிலுள்ள சபையாராகிய எங்கள் மத்தியில் பெரிதளவில் வேறுபட்டக் கருத்துக் காணப்படுகின்றது. இக்கேள்விகளானது உங்களால் பல தடவைகள் கையாளப்பட்டுள்ளன என்பதை நான் அறிவேன். ஆனால் நாங்கள் புரிந்துகொள்ளும் திறனில் மிகவும் மந்தமானவர்களாகவும், மிகவும் ஓட்டையான பாத்திரங்களாகவும் காணப்படுகின்றோம்!

கேள்விகள்: (1) "சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகையில், அவர் பெரோயா ஆராய்ச்சி வகுப்பில் கருத்துக்களை முன் வைப்பதையும் உள்ளடக்கித்தான் கூறுகின்றாரா? (1 கொரிந்தியர் 14:34;1 தீமோத்தேயு 2:11-12).

மேலே உள்ள கடிதம் மற்றும் கேள்விகளுக்குப் பதில்:

உங்கள் கேள்விகளுக்கான எங்கள் பதில்: சகோதரிகள் பெரோயா பாட வகுப்பில் பங்கெடுப்பதில், அப்போஸ்தலனுடைய கட்டளையானது மீறப்படுகிறதில்லை என்று நாங்கள் புரிந்திருக்கின்றோம். அங்கு அர்ப்பணிக்கப்பட்ட அல்லது திறமையுள்ள சகோதரர் இல்லையெனில், சகோதரிகள் பெரோயா வகுப்பினை நடத்திடக்கூடாது என்று சொல்லிடுவதற்கு நான் எந்தக் காரணத்தையும் காண்கிறதில்லை.

- கர்த்தருக்குள்ளான உங்களது சகோதரனும், ஊழியக்காரனும்.

---